சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | குமார் |
| தந்தை பெயர் | : | பொன்னன் |
| கிராமம் | : | முகந்தனூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாய கூலி வேலை |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா-1 அன்புச்செல்வன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த

02.11.2025 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் முகந்தனூரில் உள்ள வரதராஜன் கடை முன்பாக அதாவது அ.சா-4 கடை முன்பாக நான் மளிகை பொருட்கள் வாங்க நின்று கொண்டிருந்தேன். அ.சா-1 அன்புச்செல்வனும், எதிரி சாந்தகுமார் என்பவரும் பேருந்தில் இருந்து இறங்கி வந்தார்கள். முதலில் அ.சா-1 அன்புச்செல்வன் அ.சா-4 வரதராஜன் கடையில் வெற்றிலை சீவல் வாங்கிக்கொண்டிருந்தார். அ.சா-1ன் பின்னால் எதிரி சாந்தகுமார் வந்தார். அ.சா-1 வெற்றிலை பாக்கு கேட்டபோது எதிரி அ.சா-1 யை பார்த்து பற பயலே உனக்கு என்ன அவசரம் என்று கூறி அ.சா-4 ன் கடையில் இருந்த சோடா பட்டிலை எடுத்து எதிரி அ.சா-1ன் தலையில் அடித்துவிட்டார். கடையை ஒட்டி வேளி அடைக்கப்பட்டிருந்தது அதில் உள்ள கம்பை எடுத்து எதிரி, அ.சா-1யை மீண்டும் அடித்தார். கூட்டம் வந்தவுடன் எதிரி சாந்தகுமார் போய்விட்டார். போலீசார் வந்தார்கள். ஆம்புலன்ஸ் மூலம் அ.சா-1 யை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் 03.11.2025 ஆம் தேதி மதியம் 12.30 மணியளவில் காவல் துணை காண்காணிப்பாளர் வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் என்ன நடந்தது என்று விசாரணை செய்தார்கள். நடந்த விபரம் நான் சொன்னேன். போலீசார் சோடா பட்டிலை எடுத்தார்கள், பக்கதில் உள்ள ஒரு கட்டையை எடுத்தார். அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜலில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் கட்டப்படும் சா.பொ-1 ஆன உடைந்த சோடா பாட்டில் துண்டுகள் அங்கிருந்து கைப்பற்றியது தான். என்னிடம் காட்டப்படும் மரக்கம்பு சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்ற பட்டதாகும் அது **சா.பொ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் நானும், சாட்சி சுந்தராஜன்

மற்றும் அ.சா-4 வரதராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம். பின்னர் போலீசார் சம்பவ இடத்தில் அருகாமையில் உள்ள கடை யார் கடை என்று கேட்டார்கள் நான் சொன்னேன். அதை எழுதிக்கொண்டு மகஜர் ஒன்றில் கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** **- இல்லை-**

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:44:55 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.